சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.18.06.2024

OS.No. 174/2019 c/w O.S.127/2023 c/w O.S.128/2023

PW : கௌரிசங்கர் (வயது 36 ) த/பெ. சுந்தர்ராஜ்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

குு.வி விசாரணை

நான் வாதியின் மகன். நான் எம்.எஸ்.சி கணிணி பொறியியல் படித்துள்ளேன். நான் சென்னையில் HCL நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். நான் சென்னையில் குடியிருக்கிறேன். எனது சென்னை முகவரி என்ன என்றால் T4, குரு கைலாஷ் அப்பார்ட்மெண்ட்ஸ், பாம்பன் சுவாமிகள் சாலை, சிட்லபாக்கம், சென்னை-64 ஆகும்.இவ்வழக்கின் பிரதிவாதி O.S.No.127/2023 என்று எண்ணிடப்பட்டுள்ள வழக்கினை ஏற்கனவே என் மீது பலவந்தமாக அவரை, காலி செய்ய கூடாது என்று கூறி முதன் முதலில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் மாத வாடகை ரூ.10,000/- மொத்த முன் தொகை ரூபாய் 50,000/-. தென்பாதி சொத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறி நான் அ.வ.எண்.128/2023 என்று எண்ணிடப்பட்டுள்ள வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கூறுவது போல் வடபாதி சொத்தை மட்டும் வாடகைக்கு விட்டுள்ளதாக எந்த ஒரு ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. நான் கூறுவது போல் வடபாதி தென்பாதி என்று தனித்து வாடகைக்கு விடவில்லை என்றும், மொத்த சொத்தையும் சேர்த்து தான் பிரதிவாதி வாடகைக்கு இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் திருச்சியில் வசிக்கவில்லை. திருச்சியில் HCL கம்பெனி கிளை இல்லை என்றால் சரிதான். அதனால் என்னால் இங்கு வசிக்கமுடியாது என்றால் வீட்டிலிருந்து வேலை செய்து கொள்ளும் வசதி உள்ளது. கொரோனா காலத்திற்கு பின்பு மாதத்தில் 4 தினங்கள் மட்டும் கம்பெனியில் நேரில் வேலைக்கு செல்லவேண்டும். கம்பெனிக்கு வந்து வேலை செய்யவேண்டும் என்று கூறினால் நான் திருச்சிக்கு வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது குடும்பத்தினர் இங்கு வசிப்பார்கள் அல்லது நான் வேறு வேலை மாற்றி கொண்டு வர வாய்ப்புள்ளது. பிரதிவாதி RNSJ சர்வீசஸ் என்ற கம்பெனியை பிரதிவாதி வழக்கு சொத்தில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அது என்ன மாதிரியான சர்வீஸ் என்று எனக்கு தெரியாது. அதற்கென்று வாடகை ஒப்பந்தம் எதுவும் இல்லை. தாவா சொத்திற்கு என்று தனியான வாடகை ஒப்பந்தம் இல்லை, வாய்மொழி ஒப்பந்தம் செய்துள்ளோம். ஒரு மாத வாடகை பாக்கி ரூ.10,000/- மட்டும் பாக்கி உள்ளது. அவர் வாடகையை முறையாக கொடுப்பதில்லை. பிரதிவாதி முறையாக வாடகையை கொடுக்கவில்லை என்று சட்ட அறிவிப்பு அனுப்பி உள்ளேனா

என்றால் இல்லை, நீதிமன்றத்தின் மூலம் வாடகை பாக்கி வாங்கினேன். தாவா சொத்தை காலி செய்ய வேண்டும் என்று வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினேன். அந்த சட்ட அறிவிப்பை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் நான் கூறுவதுபோல், சொத்துரிமை மாற்று சட்ட விதிகளின் படி தாவா சொத்தை காலி செய்யுமாறு பிரதிவாதிக்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் நானும் பிரதிவாதியும் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் தான் பிரதிவாதிக்கு தாவா சொத்தை காலி செய்யுமாறு தொந்தரவு கொடுத்தேன் என்றும், பிரதிவாதி நான் கூறுவது போல் தாவா சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எனது தகப்பனாருக்கும் நல்ல உறவு தான் உள்ளது. எனது தகப்பனாருக்கு ஆதரவாக நான், எனது தகப்பனார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியுடன் தாவா சொத்தில் கிரய ஒப்பந்தம் செய்து கொண்டேனா என்றால் இல்லை. நான் கூறுவது தவறு என்றும் பிரதிவாதியுடன் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே கிரய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**ம.வி** - இல்லை.

/signed/
கௌரிசங்கர்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

/signed/
சார்பு நீதிபதி
இலால்குடி